அ.வ.எண்.116/2014
நாள்.22/07/2019
<u>பெயர்- செந்தமிழ் த.பெ. கூசன்</u>
<u>வாதி தரப்பு 1ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்</u>
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்துக்கான கிரயம் என் பெயரில் உள்ளதா என்றால் இல்லை பூர்வீக சொத்து. யாருடைய பூர்வீக சொத்து என்றால் என்னுடைய தந்தை வழி தாத்தா ராமகவுண்டரின் பூர்வீக சொத்து. தாவா சொத்தின் சர்வே எண்.19/13, 3ஏ. தாவா சொத்து யாருக்கு பாத்தமியம் என்றால் எங்களுக்கும் என் பெரியப்பா பெருமாள் கவுண்டர் வாரிசுகளுக்கும் பாத்தியம் தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் சிட்டா ஒப்படைத்துள்ளேன். தாவா சொத்தின் பட்டா எண் 65 ஆகும். தாவா சொத்தில் வாதியின் கூட்டுபாத்தியத்தை விளம்புகை செய்ய யார் யாருக்கு பாத்தியம் என்றால் சிவாஜி செந்தமிழ் ஆகியோருக்கு கூட்டு பாத்தியம். ச.எண்.19/13 3 ஏ சிவாஜிக்கும் பாத்தியமுள்ளது. அது எப்படி பாத்தியம் என்றால் தாவா சொத்துக்கு பெருமாள் கவுண்டர் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை சிட்டா மட்டும் தான் உள்ளது. பெருமாள் கவுணடர் பெயரில் சிட்டாவை ஒப்படைத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து எனக்கும் பிரதிவாதிக்கும் பூர்வீக சொத்து அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து முதலில் ஒரு பெருமியம்மாள் உடையது என்றால் இல்லை எங்களுடைய பூர்வீக சொத்து. என் சொத்துக்கு எதற்காக வழக்கு போட்டேன் என்றால் என் சொத்துக்கு மரவள்ளி கிழங்கு எடுத்து 2 நாட்கள் காய்ந்துவிட்டதால் வழியை தடுத்தால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வழித்தடத்திற்கு தான் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழித்தடத்தின் அடி நிலமானது பெருமியம்மாளுக்கு பாத்திப்பட்டது என்றால் சரியலல். தாவா சொத்தின் பட்டா சிட்டா அடங்கல் ஆகியவை பெருமியம்மாள் பெயரில் உள்ளது என்றால் நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு எங்கள் பெயரில் தான் உள்ளது அதற்கு பின்பு பெருமியம்மாள் பெயருக்கு எவ்வாறு போனது என்று தெரியாது. எந்த வருடத்தில் நில உடைமைமேம்பாட்டு திட்டத்தின்படி அளவு செய்யப்பட்டது என்றால் 1987. 1987க்கு முன்பு தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நில உடைமை மேம்டபாட்டு திட்டத்திற்கு நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் இந்த சமயத்தில் நான் மைனராக இருந்தேன். அந்த சமயத்தில் நான் அங்கு இல்லை. தற்போது எனக்கு 45 வயதாகிறது. நான் மேஜராகிய 25 வருடத்திற்கு மேல் ஆகிறது என்றால் சரிதான். மேஜரான பிறகு இன்று வரை பெருமியம்மாளின் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவிற்கு ஆட்சேபனை செய்தேனா என்றால் மாவட்ட வருவாய் துறை அலுவலருக்கு ஆட்சேபனை செய்துள்ளேன். ஆட்சேபனை செய்ததற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து வண்டிப்பாதை என்னுடைய பூர்வீக சொத்து கிடையாது என் பாட்டனார் பெயரில் பட்டா இருந்ததில்லை என்றாலும் தாவா சொத்து பெருமியம்மாளுக்கு பாத்தியப்பட்டு அவர் பெயரில் இருந்தது என்றாலும் அதன் காரணமாக தான் அவரது பெயருக்கு யூடிஆர்-க்கு முன்பே பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவிதமான உரிமையோ பாத்தியமோ அனுபவமே இல்லை என்பதால் தான் நான் ஏதேனும் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் நான் அந்த சமயத்தில் மைனராக இருந்ததால் விபரம் தெரியவில்லை. உண்மையிலேயே எனக்கு பாத்தியம் இருந்திருந்தால் கடந்த 25 வருடத்திலேயே நான் ஆட்சேபனை செய்திருப்பேன் என்றால் எனக்கு அது வரை வழியை யாரும் தடுக்காததால் ஆட்சேபனை செய்யவில்லை. நான் எந்த காலத்திலும் தாவா பாதையில் சென்றதில்லை என்றாலும் எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் பொருத்து 26.04.1984 தேதியிலேயே பெருமியம்மாளிடம் கிரயம் பெற்று முழு பாத்தியஸ்தராக பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார் என்றால்

சரியல்ல. பிரதிவாதிகளுக்கிடையை தாவா சொத்து மற்றும் மற்ற சொத்து குறித்து பிரச்சனை இல்லை என்றால் அந்த சொத்து எங்களுக்கும் பாமங்தியம் உள்ளது. பிரதிவாதிகளுக்கே சரியான படி பாதை வசதி இல்லாததால் தான் பெருமியம்மாளிடம் சொத்து வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல அனைத்து சொத்துக்களும் பூர்வீக சொத்துக்கள். பிரதிவாதிகள் கிரயத்திற்கு வாங்கிய பிறகு தான் 6 மீட்டர் அகலத்திற்கு வண்டிப்பாதை அமைத்தார்கள் என்றால் சரியல்ல 10 அடி அகலத்தில் தான் உள்ளது. எனக்கு தனிப்பட்ட முறையில் வாங்கி தாவா பாதையில் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லாததால் அந்த சொத்துக்கள் குறித்து வருவாய் துறை ஆவணங்கள் மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

கு.வி. வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.